மாவு மில்காரர் சிறுவன் ஒரு கழுதை




பிரையான் வைல்ட்ஸ்மித்

மாவு மில்காரர் சிறுவன் ஒரு கழுதை

பிரையான் வைல்ட்ஸ்மித்





ஒரு நாள் மாவு மில்காரர் தனது
கழுதையை சந்தைக்கு கொண்டு சென்று
விற்க முடிவு செய்தார்.









அவரும் அவரது மகனும் வயலில்
மேய்ந்து கொண்டிருந்த
கழுதையைப் பிடிக்கச் சென்றனர்.

அவர் கழுதை விரும்பிச் சாப்பிடும் கேரட்டுகளை எடுத்துச் சென்றார். கேரட்டைப் பார்த்தவுடன் கழுதை வேகமாக அவர்களிடம் வந்தது.





கழுதை கேரட்டைச் சாப்பிட்ட பின், அதை வீட்டிற்கு ஓட்டி வந்தார்கள். கழுதையை நன்றாக குளிப்பாட்டி, கால்குளம்புகளை மெருகூட்டி, பிடரியை வாரிவிட்டு அலங்கரித்தார்கள். இப்போது கழுதை மிகவும் அழகாக சுத்தமாக இருந்தது. மீண்டும் அதன் கால்கள் அழுக்காகிவிடக்கூடாது என்பதனால் கழுதையைத் தூக்கிக் கொண்டு செல்ல முடிவு செய்தார்.

சிறிது தூரம் சென்றதும் வழியில்
ஒரு விவசாயியைச் சந்தித்தனர் .

விவசாயிக்கு அவர்களைப் பார்த்ததும் சிரிப்பை
அடக்கமுடியவில்லை.
"இவ்வளவு முட்டாளாக இருக்கிறீர்களே!
கழுதை உங்களை சுமப்பதில்லாமல் நீங்கள்
கழுதையை சுமக்கிறீர்களே" என்று சிரித்தார்.






தாங்கள் கேலி
செய்யப்படுவது அவருக்கு
பிடிக்கவில்லை.



கழுதையை கீழே இறக்கி
விட்டார்கள்.

சிறிது தூரம் சென்றதும் , நடந்து நடந்து
களைத்துப்போன சிறுவனை கழுதையின்
முதுகில் ஏற்றி விட்டார்.





இன்னும் சிறிது தூரம் சென்றதும் மூன்று வியாபாரிகள் எதிர்ப்பட்டனர். சிறுவன் கழுதை மீது சவாரி செய்வதையும், தந்தை நடந்துவருவதையும் கண்டு அவர்கள் மிகவும் கோபமடைந்தனர்.



"சோம்பேறிப் பயலே கீழே இறங்கு! உன் வயதான அப்பா சவாரி செய்யட்டும்" என்று திட்டிவிட்டுச் சென்றனர்.



அதன்படி , சிறுவனை இறக்கிவிட்டு
அப்பா கழுதையின் முதுகில் ஏறிக்கொண்டார்.

கொதிக்கும் வெயிலால், சிறுவன் சீக்கிரமே மீண்டும்
சோர்வடைந்தான்.








சிறிது நேரம் கழித்து வழியில் மூன்று சிறுமிகளை சந்தித்தனர். "உங்களுக்கு வெட்கமாக இல்லை? உங்கள் பையன் மிகவும் சோர்வாக இருக்கும்போது நீங்கள் மட்டும் எப்படி இன்பமாக சவாரி செய்யலாம்?" என்று கோபப்பட்டார்கள்.

அதனால் அப்பா மகனையும் தனக்குப் பின்னால் உட்காரச் சொன்னார். பின்னர் இருவரும் கழுதை மீது சவாரி செய்தனர்.



இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும் தேவாலயத்திற்கு வெளியே ஒரு மதகுரு நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அவர் "இந்த சிறிய விலங்கின் முதுகில் இரண்டு பேர் சவாரி செய்கிறீர்களே உங்களுக்கு இதயத்தில் இரக்கமே இல்லையா?" என்று கண்டித்தார்.







இதைக் கேட்டு இரண்டு பேரும் கீழே இறங்கி
கொளுத்தும் வெயிலில், கழுதை பின்தொடர,
களைப்புடன் நடந்தார்கள்.



ஒருவழியாக சந்தைக்கு வந்து சேர்ந்தார்கள். தந்தையும் மகனும் வெயிலில் நடப்பதைப் பார்த்த மக்கள், " கழுதை மீது உட்கார்ந்து வசதியாக சவாரி செய்யாமல் நடந்து போகும் இந்த மனிதன் ஒரு கிறுக்கன்" என்று ஏளனம் செய்தனர்.



வெகுவிரைவில் கழுதையை ஒரு அன்புள்ளம் கொண்ட விவசாயிக்கு விற்றார். வெகுநேரம் வெயிலில் நடந்ததாலும் , போவோர் வருவோர் அளித்த பலவிதமான அறிவுரைகளாலும் அவருக்குத் தலை சுற்றியது!

அவர் தனது பையனிடம் "இனிமேல் நான் ஒரு முடிவெடுத்தால், அதில் உறுதியாக இருப்பேன் . யாருக்காகவும் மாற்றிக் கொள்ள மாட்டேன்" என்றார். மகனும் அதை ஆமோதித்து தலை ஆட்டினான். பின்னர் இருவரும் சாப்பிடக் கிளம்பினர்.

முற்றும்